செய்தி வெளியீடு எண்: 1123 நாள் : 22.12.2010.

**கூட்டுறவு மற்றும் அமுதம் அங்காடிகளில் வெங்காயம் விற்பனை செய்யப்படும்**
**மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்**
**திரு. எ.வ. வேலு அறிவிப்பு**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெங்காயத்தின் விலையினை கட்டுப்படுத்திட உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற அறிவுரைக்கிணங்க, கூட்டுறவு மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மூலமாக மொத்த விற்பனை விலையிலும், சில்லரை விற்பனை விலையிலும் வெங்காயம் விற்பனை செய்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உட்பட அனைத்து மாநிலங்களிலும் வெங்காயத்தின் விலை திடீரென உயர்ந்துள்ளது. வடகிழக்கு பருவ மழை காரணமாக அறுவடை நிலையில் இருந்த பயிர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு பயிர்கள் அழுகியதால் உற்பத்தி பாதிக்கப்பட்டு வரத்து வெகுவாக குறைந்துள்ளது. இதன் விளைவாக விலைகள் உயர்ந்துள்ளன

தமிழ்நாட்டிற்கு வெங்காயம் ஆந்திரா, கர்நாடகா மற்றும் மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து வருகின்ற அளவினை பொறுத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. கடந்த மூன்று தினங்களாக வரப்பெறும் சரக்குந்துகள் எண்ணிக்கை குறைந்ததால் விலைகள் உயர்ந்தன. மேலும், அகில இந்திய அளவிலும் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதால், வெங்காயத்தின் விலை கடுமையாக உயர்ந்தது. மேலும், வெங்காயம் சிங்கப்பூர், மலேசியா, பங்களாதேஷ் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டதால் வெங்காய இருப்பு குறைவு ஏற்பட்டது. எனினும், மத்திய அரசு உடனடியாக வெங்காய விலையை கட்டுப்படுத்துவதற்கு ஏதுவாக ஏற்றுமதிக்கு தடை விதித்துள்ளது.

கூட்டுறவுத் துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் உயர் அலுவலர்கள் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு வட இந்தியாவில் வெங்காய விற்பனை மையங்களுக்கு சென்று கொள்முதல் செய்து லாபநோக்கமின்றி மலிவு விலையில் கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் அமுதம் அங்காடிகள் மூலம் சென்னை மற்றும் மாநிலத்தின் பிற மாவட்ட தலைநகரங்களிலும் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொது மக்கள் பயன்பெறும் வகையில், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக அமுதம் அங்காடிகள் மற்றும் கூட்டுறவு அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

*******

வெளியீடு–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.